

# தலைப்பு: புறப்படு பெண்ணே புறப்படு

**வழங்கியோர்**

புறப்படு பெண்ணே புறப்படு !
கஷ்டங்களை தாங்கியது போதும் !

கண்ணீர் வடித்தது போதும் !
நீலவானில் நிலவாய் குளிர்ந்தது போதும் !

மேகங்களாக இணைந்து
மழையாய் பொழிந்தது போதும் !

அழகுக்கு அழகு சேர்க்க
பூவாய் பூத்தது போதும் !

இருட்டில் நட்சத்திரமாய்
ஒளிர்ந்தது போதும் !

பொறாமையை மறந்து பொறுமையாய் இருந்தது
போதும் !

பொன்னகையை வெறுத்து புன்னகையை
விரும்பியது போதும் !
அடுப்பு ஊதியது போதும் !

மெல்லிய காற்றாய் மாறி
மேனியைத் தழுவி வருடியது போதும் !

வையம் வாழ வழி செய்திடு !
வானவில்லை சற்று நிமிர்த்திடு !

உதாசீனப் படுத்தும் போது வீறுகொண்டு பொங்கி
எழுந்திடு !

மனிதநேயம் அற்றவர்களை மண்ணோடு மண்ணாக
மக்கவைத்துவிடு !

உன்னை சீண்டிப் பார்ப்பாவர்களை உன்
ஓரவிழிகளால் சுட்டுஎறித்துவிடு !

புது உலகம் படைத்திடு!
பூமி மாதா வுடன் இணைந்து பூலோகத்தை காத்திடு !

சட்டம் என்ற சவுக்கை உன் கையில் எடுத்திடு!
சாதி மதம் தாண்டி வாழ்ந்து காட்டிடு !

அடிமையாக வாழ்ந்தது போதும்!
நிலவை கால் பந்தாய் மாற்றிவிடு!

வான் அளவு உயர்ந்திடு!தோல்வியை
ஜெயித்து வாகைப்பூவை சூடிடு !

*கவிதாயினி சை. சபிதா பானு*
*காரைக்குடி*

புறப்படு பெண்ணே பறப்படு
புவிததை ஆள பிறப்பெடு
திறம்பட செய்ய திறப்பெடு
தீவினை அகற்ற தகர்த்திடு

முள்வலி தாண்ட முடிவெடு
முகவுரை எழுத முயன்றிடு
உள்வலி உரைக்க உயிர்ப்பெடு
உலகை ஆழ உருவெடு

புதுமைப் பெண்ணே புறப்பட்டு
புலத்தில் பதிக்க புலர்ந்திடு
பதுமை போக்கி பதித்திடு
பாரதிப் பெண்ணாய் பறந்திடு

சாதனைப் படைத்தது சாய்ந்திடு
சரித்திரம் தேட சகித்திடு
வேதனை இல்லை விழித்திடு
வேகமாய் உழைக்க விரைந்திடு

வீரப் பெண்ணாய் வாழ்ந்திடு
விடிவைக் காண விளைந்திடு
தரணியில் தடைகள் தாண்டிடு
தாரகையாக போல திகழ்ந்திடு

இமயம் உயர எழுந்திடு
இலக்கை எட்ட முனைந்திடு
இமைகள் போல காத்திடு
இறைவன் அடியில் பணிந்திடு

பாரதிப் பெண்ணாய் பதித்திடு
பாரினில் நிலையாய் பறந்திடு
புரிதலை நோக்கி நின்றிடு
புலத்தை ஆள்வோம் பறப்படு.

*சரளா விமலராஜா*
*சுவீஸ்*

புறப்படு பெண்ணே புறப்படு
புதுமைகள் புகுத்தப் புறப்படு

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
பாரினில் மிளிரப் புறப்படு பெண்ணே புறப்படு

கொடுமைகள் நிகழ்த்தும் கொடியவர் செயலை
கடுமையைக் காட்டியே
கவிவடிவாக்கு

புவியோர் புகுத்திய
ஏற்றத் தாழ்வை
சமன் படவேண்டின்
சம்மட்டி தூக்கு

பெண்ணும் ஆணும் பேதமை நீங்க
ஓதும் வேதம்
ஓர்வரிதானே

ஓயா அலைபோல்
ஓடியடங்கு
மாயாவுலகம் மறுநொடி நோக்கும்

காயா பழமா
காட்டு நற்செயலில்
ஏட்டுச் சுறக்காய்
எப்போதும் உதவும்

கூட்டு வாழ்க்கையை
கொண்டாடி மகிழ்வோம்
புறப்படு பெண்ணே புறப்படு துடிப்பாய்

*கா பெரியசாமி*
*காரைக்குடி*



புறப்படு பெண்ணே புறப்படு

சீறும் சிங்கமாய்

பாயும் புலியாய்

பூமீயின் நிலநடுக்கமாய்

கடலின் சுனாமியாய்

காற்றின் புயலாய்

எரிமலையின் எரிகுழம்பாய்

பாலியள் வன்கொடுமைக்கு எதிராய் புறப்படு பெண்னே புறப்படு

ஆண்இல்லா உலகம் எனக்கு வேண்டாம்!

பெண்இல்லா உலகம் உனக்கு வேண்டாம் என்றால்

என்னுடன் நீயும் புறப்படு! இதை புரியவைக்க புறப்படு பெண்னே புறப்படு!

ஜீவிதா
*காரைக்குடி*

பெண்னே நீ ஓர் அழகான காவியம் - உன்னை
அறைக்குள்ளே முடங்கச்செய்யும் இந்த உலகம்
மயங்காதே விழித்தெழு பெண்னே நீ ஒரு
தலைமுறைக்கே விதையாவாய்...

அடுப்பங்கறை அனலில் வெந்த காலம் இல்லை
இங்கே பெண்னே நீ விழித்திடு - ஆகாய
விமாத்தையும் இயக்கும் ஆற்றல் உன்னுள்ளே
புறப்படு பெண்னே...

நேற்க்கொண்ட பார்வை தயங்காத குணம்
வரலாற்று போற்றும் புது வரலாறு படைத்திட
புறப்படு பெண்னே..

உன்னால் முடியாது என்று முடங்கி உறங்கிவிடாதே
இது உனக்கான உலகம் எங்கும் உன் வீரம் தலைக்க
புறப்படு பெண்னே....

மொத்தத்தில் பெண் என்பவள் இந்த உலகத்தின்
தொடக்கம் ஓய்வின்றி உழைத்திடு உனக்கான நாள்
பிறந்திடும் புறப்படு பெண்னே புறப்படு...

*இரா.பாலமுருகன்*